Cambridge Assessment International Education

# Cambridge International A Level

**TAMIL** **9689/42**

Paper 4 Texts **October/November 2024**

**2 hours 30 minutes**

You must answer on the enclosed answer booklet.

You will need: Answer booklet (enclosed)

**INSTRUCTIONS**
- Answer **three** questions in total in **Tamil**, each on a different text:
  - Answer **at least one question** from Section 1.
  - Answer **at least one question** from Section 2.
  - Answer **one other question** from **either** Section 1 **or** Section 2.
- Follow the instructions on the front cover of the answer booklet. If you need additional answer paper, ask the invigilator for a continuation booklet.
- Dictionaries are **not** allowed.
- You may **not** take set texts into the examination.

**INFORMATION**
- The total mark for this paper is 75.
- Each question is worth 25 marks.

## கட்டளைகள்
- மொத்தம் மூன்று கேள்விகளுக்கு, வெவ்வேறு பாடப் பகுதிகளிலிருந்து, எடுத்து, **தமிழில்** விடை எழுதவும்:
  - முதல் பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு கேள்விக்கு** விடை எழுதவும்.
  - இரண்டாவது பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு கேள்விக்கு** விடை எழுதவும்.
  - முதல் **அல்லது** இரண்டாவது பகுதியிலிருந்து **மற்றொரு கேள்விக்கு** விடை எழுதவும்.
- விடை எழுதுவதற்கான புத்தகத்தின் முதல் பக்கத்திலுள்ள கட்டளைகளைப் பின்பற்றவும். கூடுதல் விடைத் தாள்கள் தேவைப்பட்டால், தேர்வு அதிகாரியிடம், தொடர்ச்சிக்கான புத்தகத்தைக் கேட்கவும்.
- அகராதிகள் **அனுமதிக்கப்படமாட்டாது**.
- தேர்வு அறைக்குள் எந்தப் பாடப் புத்தகத்தையும் எடுத்துச் **செல்லக்கூடாது**.

## தகவல்
- இந்தக் கேள்வித்தாளுக்கான மொத்த மதிப்பெண்கள் 75.
- ஒவ்வொரு கேள்விக்கும் 25 மதிப்பெண்கள்.

This document has **12** pages. Any blank pages are indicated.


© UCLES 2024

https://xtremepape.rs/

## விடைத்தாள் புத்தகத்தைப் பயன்படுத்துவதற்கான கட்டளைகள்

கருப்பு அல்லது கரு நீலப் பேனாவைப் பயன்படுத்தவும்.

வரைபடங்களுக்கோ, கிராப் வரையவோ நீங்கள் எச்.பி.பென்சிலைப் பயன்படுத்தலாம்.


உங்களுடைய பெயர், சென்டர் எண், உங்கள் எண் ஆகியவற்றை, இந்தப்பக்கத்தின் மேலேயுள்ள, அதற்கான இடத்தில் எழுதவும். தெளிவாக, பெரிய எழுத்துக்களில் எழுதவும்.

எழுத்துக்களை அழிப்பதற்கான பேனாவையோ, திரவத்தையோ **பயன்படுத்தக்கூடாது.**

எந்த பார்க்கோடிலும் **எழுதக்கூடாது**.

கொடுக்கப்பட்ட விடைத்தாள் புத்தகத்தில் எழுதவும். தாளின் இரு பக்கங்களிலும் எழுத வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் விடை எழுதிய பின்னர் இரண்டு வரி இடைவெளி விடவும்.

நீங்கள் விடை எழுதும் கேள்வியின் எண்ணை முதல் மார்ஜினில் எழுதவும்.




நீங்கள் விடை எழுதும் கேள்வியில் துணைக் கேள்விகள் இருந்தால் (எடுத்துக்காட்டு 1.a) துணைக் கேள்வி எண்ணை இரண்டாவது மார்ஜினில் எழுதுங்கள்.

நீங்கள் விடைத்தாள் புத்தகத்தில், விடை எழுதுவதற்கான குறிப்புகளையும் பேனாவால் எழுதிப் பழகலாம் ஆனால் மதிப்பெண் **போடவேண்டாத** அத்தகைய குறிப்புகளை அடித்து விடுங்கள். படிக்கமுடியாமல் அடிக்கத் தேவை இல்லை.

விடைத்தாள் புத்தகத்தின் எந்தப் பகுதியையும் **கிழித்துவிடாதீர்கள்**.

நீங்கள் எழுதிய எல்லா தாள்களையும் கொடுத்து விடுங்கள் தொடர்ச்சிக்காக விடைத்தாள். புத்தகங்கள் வாங்கியிருந்தால் அவற்றையும் விடைத் தாள் புத்தகத்தில் இணைத்து விடுங்கள்.



https://xtremepape.rs/

BLANK PAGE



https://xtremepape.rs/

ஏதாவது **மூன்று** கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகள் எடுத்து விடைகளை எழுதவும். முதல் பகுதியிலிருந்து ஒரு கேள்வியும், இரண்டாவது பகுதியிலிருந்து ஒரு கேள்வியும் பகுதி ஒன்று அல்லது இரண்டிலிருந்து மூன்றாவது கேள்வியும் எடுத்து விடைகள் எழுதவும்.

## பகுதி 1

**1 பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a) புறநானூறு**

வாடாஅது பனி படு நெடு வரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரை பொரு தொடு கடல் குணக்கும்
குடாஅது தொன்று முதிர் பொளவத்தின் குடக்கும்
கீழது முப்புணர் அடுக்கிய முறை முதற் கட்டின்
நீர் நிலை நிவப்பின் கீழும் மேலது
ஆனிலை உலகத்தானும் ஆனாது
உருவும் புகழும் ஆகி விரி சீர்த்
தெரிகோல் ஞமன்ன் போல ஒரு திறம்
பற்றல் இலியரோ நின் திறம் சிறக்க
செய்வினைக்கு எதிர்ந்த தெவ்வர் தேஎத்துக்
கடற்படை குளிப்ப மண்டி அடர்ப் புகர்ச்
சிறு கண் யானை செவ்விதின் ஏவிப்
பாசவல் படப்பை ஆர் எயில் பல தந்து
அவ் எயில் கொண்ட செய்வுறு நன் கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கிப்
பணியியர் அத்தை நின் குடையே முனிவர்
முக்கண் செல்வர் நகர் வலஞ் செயற்கே
இறைஞ்சுக பெரும நின் சென்னி சிறந்த
நான்மறை முனிவர் ஏந்து கை எதிரே
வாடுக இறைவ நின் கண்ணி ஒன்னார்
நாடு சுடு கமழ் புகை எறித்தலானே
செலியர் அத்தை நின் வெகுளி வால் இழை



https://xtremepape.rs/

மங்கையர் துனித்த வாள் முகத்து எதிரே
ஆங்க வென்றி எல்லாம் வென்று அகத்து அடக்கிய
தண்டா ஈகைத் தகைமாண் குடுமி
தண்கதிர் மதியம் போலவும் தெறு சுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெரும நீ நிலமிசை யானே
காரிகிழார் - **பாடல் 6**

**(i)** ஞமன், படப்பை மற்றும் கண்ணி ஆகிய சொற்களின் பொருள் என்ன?

**(ii)** பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியின் வெற்றியையும் புகழையும் சிறப்பித்துக் கூறும் காரிகிழார் அது மட்டுமல்லாமல் சிறந்த உறுதிப் பொருள்களை அவனுக்கு அறிவுரையாகக் கூறுகிறார் என்பதை விளக்குக. [25]

**அல்லது**

**(b) சிலப்பதிகாரம்**

கடற்கரைச் சூழலில் மகிழ்ச்சியுடன் தொடங்கிய கானல் வரி இசைப்பாடல் இறுதியில் கோவலன் மனம் மாறி மாதவியை விட்டுப்பிரியும் பிரிவுத்துயரில் நிறைவு பெறும் காட்சியை விளக்குக. [25]



https://xtremepape.rs/

**2 திருக்குறள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

நண்பாற்றார் ஆகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றார் ஆதல் கடை.

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்.

**(i)** மேலே சொல்லப்பட்டிருக்கும் மூன்று குறள்களில் வரும் அரம், ஞாலம் என்ற சொற்களின் பொருள் என்ன?

**(ii)** பண்புடையவர்கள் இருப்பதால் மட்டுமே இவ்வுலகம் இன்னும் மறையாமல் உள்ளது என்ற வள்ளுவரது உறுதியான கருத்தை மேலே குறிக்கப்பட்டுள்ள குறள்களிலும், பண்புடைமை அதிகாரத்தில் உள்ள மற்ற குறள்களிலும் எவ்வாறு வலியுறுத்துகிறார் என்று விளக்குக? [25]

**அல்லது**

**(b)** கொல்லாமை என்னும் அதிகாரத்தில் அதன் சிறப்புகளை வள்ளுவர் எவ்வாறெல்லாம் போற்றுகிறார் என்று விளக்கவும்? [25]



https://xtremepape.rs/

**3 தேவாரம் - திருஞான சம்பந்தர்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.

வாழினும் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உனகழல் விடுவேன்அல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.

**(i)** எந்த சூழ்நிலையில் திருஞான சம்பந்தரால் இந்த தேவாரப் பதிகம் பாடப்பட்டது? ‘கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை’ என்பதன் பொருள் என்ன?

**(ii)** எனக்கு தேவைப்படுகின்ற பொருளை நீ எனக்கு அருளவில்லை என்றால் அது உன் திருவருளுக்கு எவ்விதத்தில் அழகாகும் என்று இறைவனையே கேள்வி கேட்ட பதிகத்தின் நயத்தினை விளக்குக? [25]

**அல்லது**

**(b)** திருவாடுதுறைப் பதிகம் அதைப் பாடும் பக்தரின் ஏழ்மையை அகற்றி வளமான வாழ்வு தருவதாகக் கருதப்படுகிறது என்பதனை பாடலில் இருந்து மேற்கோள் காட்டி விளக்கவும். [25]



https://xtremepape.rs/

## பகுதி 2

**4 இக்காலக் கவிதைகள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**பாரதியார்**

**(a)** “இழந்தநல் லின்பங்கள் மீட்குறலாம் - நீர் ஏகுதிர் கற்பனை நகரினுக்கே.” என்று கற்பனையூருக்கு நம்மை பாரதியார் அழைக்கும் மாண்பினை விளக்கிக் கூறுக. [25]

**அல்லது**

**பாரதிதாசன்**

**(b)** உழவுத்தொழிலின் மேம்பாடுகளைப் பற்றி ‘சும்மா கெடந்த நிலத்தைக் கொத்தி’ என்று தொடங்கும் பாடலில் பாரதிதாசன் கூறும் விளக்கங்கள் என்னென்ன? [25]

**5 நாவல்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** பர்மாவிலிருந்து அகதிகளாக ஓடி வந்த தமிழர்கள் பட்ட அளவில்லாத் துன்பங்களைப் பற்றி வரலாற்று ஏடுகள் மறைத்து விட்டாலும் ‘அந்த நாள்’ நாவல் எவ்வாறு விளக்குகிறது? [25]

**அல்லது**

**(b)** நாடுகளுக்கிடையே நடக்கும் போரின் விளைவு போர் வீரர்கள் மட்டுமல்லாது அனைத்து பொது மக்களும் கொடுமைக்கு ஆளாகும் அவலத்தை இந்த நாவல் எவ்வாறு படம் பிடித்துக் காட்டுகின்றது? [25]

**6 தமிழ் சிறுகதைகள்**

**(a)** டைகர் ஃபைட் காதர் என்ற ஒரு புலிக் கலைஞனின் கம்பீர முகமூடிக்குப் பின்னால் நிரந்தரமாய் குடிகொண்டிருக்கும் வறுமை மற்றும் இயலாமை பற்றி ஆசிரியர் அசோகமித்ரன் ‘புலிக்கலைஞன்’ சிறுகதையில் எவ்வாறு வெளிக்காட்டுகிறார்? [25]

**அல்லது**

**(b)** ஒரு நடுத்தர குடும்பத்தில் நாற்காலிகள் நுழைந்த விதங்களை ‘நாற்காலி’ சிறுகதை எவ்வாறு சித்தரிக்கிறது? [25]



https://xtremepape.rs/

BLANK PAGE



https://xtremepape.rs/

BLANK PAGE

© UCLES 2024


https://xtremepape.rs/

**BLANK PAGE**



https://xtremepape.rs/

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of Cambridge Assessment. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is a department of the University of Cambridge.



https://xtremepape.rs/